**மாத்தளை பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

# 1 நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தளை பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

களஞ்சியப் பொருட்கள் கொள்வனவின் போதும் விநியோகத்தின் போதும் களஞ்சிய முற்பணக்க கணக்கு முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 25,875 தொகையாக இருந்ததுடன், அம்மீதி மற்றும் ஆண்டின் நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 21,425 ஆக மொத்தம் ரூபா 47,300 தொகையான திரண்ட நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தை வருமானக் கடன்பட்டோராக கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதனை நீதிமன்ற தண்டப்பண வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த வீதவரி மிகைக் கட்டணம் ரூபா 88,265 தொகை மற்றும் ஏக்கர் வரி மிகைக் கட்டணம் ரூபா 1,881 தொகை என்பவற்றை ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நீதிமன்ற தண்டப்பணமாகக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திடமிருந்து நன்கொடையாக கிடைத்த மருந்துகளின் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 206,500 பெறுமதியான மருந்து இருப்புக்களின் பெறுவனவுகளையும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய இருப்புக்கள் ரூபா 134,035 தொகையை அதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 850 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) விடய பூர்த்தி அறிக்கையின் பிரகாரம் கட்டிட நிர்மாணங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,034,446 ஆகவும் அது ரூபா 4,213,648 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 820,798 குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபையிடமுள்ள ரூபா 680,000 பெறுமதியான 07 காணித்துண்டுகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 237,455 ஓய்வூதியப் பங்களிப்புத் தொகைக்காக கணக்குகளில் கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா 268,220 செலவிடப்பட்டு 100 நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவ் இருப்புக்களை களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக இயந்திரம் மற்றும் பொறிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) காணியை அளப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 85,500 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) முன்னைய ஆண்டிற்குரிய 35 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 111,715 தொகையான வருமானத்தை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 729,511 செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்படாமையால் ஆண்டின் செலவினம் மற்றும் செலவினக் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

கணக்கு விடயமொன்றுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 393,911 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகள் அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 392,543 ஆக இருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,236,345 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 மார்ச் 31 ஆம் திகதி வரை 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 8,256,355 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்விற்காக தகவல் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா 4,848,028 இற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) **<u>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்</u>** | |
| 129(i)(2) ஆம் பிரிவு | வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக அங்கீகாரமின்றி 03 வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சட்டம் | |
| 21 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்காக இயைபுச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட 226 கட்டட விண்ணப்பங்களில் 222 இற்காகவும் 2009 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 175 கட்டட விண்ணப்பங்களில் 164 இற்கும் இயைபுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) **<u>1988 இன் இலக்க பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை</u>** | |
| 5(ii) ஆம் விதி | சபை ஆதனங்கள் தொடர்பாக உரிய வகையில் காப்புறுதி செயற்பாடொன்று எடுக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தல் தலைவரின் பொறுப்பாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி மற்றும் 03 மோட்டார் சைக்கில்கள் தொடர்பாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) <u>இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்</u>

| | |
|---|---|
| (i) நி.பி 371 | வழங்கப்பட்ட முற்பணம் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 06 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 310,367 ஆன முற்பணங்கள் 03 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் கடந்திருந்தும் 2011 யூன் 30 ஆம் திகதி வரையில் மீள்நிரப்பியிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1646 | சபைக்குச் சொந்தமான 03 மோட்டார் சைக்கில்கள் மற்றும் கை உழவு இயந்திரத்திற்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பவற்றை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 07 வாகனங்களின் ஓட்டப்பதிவேடுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தலில் 01 முதல் 06 மாதங்கள் வரையான தாமதம் அவதானிக்கப்பட்டது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,083,182 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,193,019 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 880 | 913 | 684 | 823 | 822 | 500 |
| (ii) | வாடகை | 686 | 82 | 43 | 63 | 47 | 220 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,597 | 1,470 | 21 | 1,356 | 1,330 | 27 |
| (iv) | ஏனைய வருமானம் | 24,284 | 9,534 | 8,638 | 4,794 | 7,796 | 4,700 |

18 வரவு விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக சேகரிப்புக்கள் 0% முதல் 63% வரை ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 2.2.2 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட வீதவரி மீதியான ரூபா 491,109 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ஏக்கர் வரி மீதியான ரூபா 192,689 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,212,301 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 3,275,280 முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 15,238 | 13,148 | 2.090 | 13,924 | 12,460 | 1,464 |
| ஏனையவை | 10,809 | 10,517 | 292 | 9,339 | 12,264 | (2,925) |
| உப மொத்தம் | 26,047 | 23,665 | 2,382 | 23,263 | 24,724 | (1,461) |
| மூலதனச் செலவினம் | 17,145 | 54,153 | (37,008) | 19,040 | 25,330 | (6,290) |
| மொத்தம் | 43,192 | 77,818 | (34,626) | 42,303 | 50,054 | (7,751) |

### 2.4 மிகை அறவீடு

(அ) 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 36,883 ஆக இருந்தது.

(ஆ) ரூபா 1,639,825 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக என்னால் எதிர்காலத்தில் மிகை அறவீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளறாவான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலையினர் | 01 | 01 |
| இடை நிலையினர் | 15 | 15 |
| ஆரம்ப மட்டத்தினர் | 17 | 14 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 27 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

ரூபா 484,806 பெறுமதியான வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,000,185 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,261,060 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,526,889 ஆக இருந்ததுடன் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட

காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 116,469 ஆக இருந்தது.

**2.6.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 951,293 ஆக இருந்தது.

**2.6.5 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்**

பௌதீக பரிசோதனைகள்/ கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 134,035 ஆக இருந்தது.

**2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 19 மற்றும் 132 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியாக நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத விடயமொன்றான செங்கோலினை அமைப்பதற்காக நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 15,500 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சர் மற்றும் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அங்கீகாரமின்றி நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் பயிலுனர் ஒருவரை சேவையிலீடுபடுத்தி மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்டிற்கும் ரூபா 66,600 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது முன்பள்ளி மாணவர்களுக்காக சீருடை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போதும் நிதி ஏற்பாட்டினை மேற்கொள்ளாமல் 2010 மே 05 ஆம் திகதி 474 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டினூடாக ரூபா 116,471 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான நிதிஏற்பாட்டினை முன்பள்ளி பாடசாலை அபிவிருத்தி செய்வதற்கான 609(3) செலவினத் தலைப்பிலிருந்தும் ரூபா 100,000 உம் ஏனைய சில செலவினத் தலைப்புக்களில் இருந்து ரூபா 16,471 தொகை மாற்றப்பட்டிருந்தது. 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 208 ஆம் விதியின் பிரகாரம் செய்தித்தாள்களில் அறிவித்தல் வெளியிடப்பட்டு கொளவனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நடைமுறையொன்றினைப் பின்பற்றப்படாதிருந்ததுடன், சீருடைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் தொடர்பான விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆங்கில பாடநெறியொன்றினை ஆரம்பிப்பதற்காக ரூபா 2,507 தொகை செலவிடப்பட்டு 850 கடிதத் தலைப்புக்களும் மாணவர்களின் ஆரம்ப அறிவினைப் பரீட்சிப்பதற்காக 1000 வினாப்பத்திரங்களும் அச்சிடப்பட்டிருந்ததுடன், வருகைப் பதிவேட்டின் பிரகாரம் இதற்காக 13 பேரே சமூகமளித்திருந்தனர். ஆங்கிலப் பாடநெறி ஆலோசனையாளருக்கு 301 ஆம் இலக்க செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டு ரூபா 30,593 ஆன நாளாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன், சம்பளத்தைச் செலுத்துவதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் மீன் விற்பனைக்கான சுயதொழிலுக்கு தேவையான தராசு ஒன்று, 02 கத்திகள் மற்றும் பொதியிடல் பெட்டியொன்று என்பவற்றிற்காக வெளி நபரொருவருக்கு ரூபா 20,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது அவரினால் அங்கு விற்பனை வியாபாரமொன்றை நடாத்தப்படாமல் இருந்ததுடன், மீன் விற்பனை செய்வதற்காக வியாபார அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(ஆ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலிருந்து கழிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி ரூபா 84,084 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்காமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபை உறுப்பினர் அபிவிருத்தி செயற்திட்ட கொடையின் கீழ் பழைய தொம்பவெல கொடஹேன்வத்த ஒருங்கிணைந்த நலன்புரி சங்கத்திற்கு ரூபா 15,000 தொகைக்கு 30 ஜீ.ஐ கூரைத் தகடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அச்செலவினத்தை மீள்நிரப்பியிருக்கவில்லை.

## 2.9 வாகனப் பயன்பாடு

252/6529 ஆம் இலக்க கெப்வண்டிக்கு திருத்தப்பட்ட என்ஜின் வழங்கி பொருத்துவதற்காக 2010 பெப்ரவரி 10 ஆம் திகதி ரூபா 220,000 செலவிடப்பட்டிருந்தது. வாகனத்திற்கு புதிதாக என்ஜினை பொருத்துவதற்கு முன்னர் மாத்தளை டிப்போ பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட்டதுடன் அவரின் 2009 மார்ச் 06 ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம் சாரதியின் கவனயீனத்தினால் உராய்வு நீக்கிகள் வெளியேறி வெற்றியளிக்காததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

மாத்தளை டிப்போ பொறியியலாளர் 2009 திசெம்பர் 25 ஆம் திகதி கெப் வண்டியை பரிசோதித்து கெப் வண்டிக்குப் பொருத்தப்பட்டுள்ள என்ஜின் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நல்ல நிலையில் காணப்படுவதாக சான்றிதழை வழங்கயிருந்த போதும் 2010 யூலை 08 ஆம் திகதிய சாரதியின் கடிதத்தின் பிரகாரம் அவ்வண்டிக்கு புதிய என்ஜினொன்றைப் பொருத்துவதற்கு ரூபா 94,490 பெறுமதியான உதிரிப்பாகங்களை வழங்குமாறு கோரப்பட்டதன் பிரகாரம் சபை ஏற்றுக்கொள்ளலின் படி அக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அகற்றப்பட்ட வாகனங்களின் பகுதிகள் சபைக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2011 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு பரிசோதனையின் போது ரூபா 28,932 பெறுமதியான 7 பொருட்கள் குறைவாக காணப்பட்டமையும் ரூபா 7,170 பெறுமதியான 3 பொருட்கள் பழுதடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 2.11 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டத்ததை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதம்

கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்த எதிர்பாரக்கப்பட்ட திகதி | 2010 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| (i) வள்ளி வெல தகணமண்ட நிர்மாணம் | 5,964,402 | 2010 யூலை 12 | 2011. சனவரி12 | 2,921,938 | பிரதேச சபையில் நிதி நெருக்கடியும் அதிக மழையும் |
| ii.கொம்போஸ்ட் பிரிவினைச் சுற்றி வேலியொன்றை அமைத்தல் | 440,000 | 2009 நவம்பர் 12 | 2010 சனவரி 12 | 225,215 | சீரற்ற காலநிலை. |

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) நிலுவை ஊழியர் கடன் நிலுவைக் கட்டுப்பாடு